




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை இயந்திரம் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவது குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (12.07.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 436/2016 நாள்: 12.07.2016

## பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்பனை இயந்திரம் (Point of Sale devices ) மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவது குறித்து உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சு.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களால் ஆய்வுக் கூட்டம் இன்று (12.07.2016) மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று பேசினார்.

பொதுவிநியோக கடைகளுக்கு விற்பனை இயந்திரங்கள் (Point of Sale devices) வழங்கப்பட்டன. இவற்றில் குடும்ப அட்டைதாரர்களின் விபரங்கள் ஆதார் மற்றும் கைபேசி எண்கள் பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். மேலும் இத்திட்டம் செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏதும் உள்ளதா என கேட்டறிந்து அதற்கான விளக்கத்தினை தெளிவுப்படுத்தினார். விற்பனையை முழுமையாக இயந்திரம் மூலமே செய்வதற்கு அனைத்து அலுவலர்களும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார். கிட்டங்கிகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்கள் நியாயவிலைக் கடைகளுக்கு கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிப்பதையும், ஒவ்வொரு நாளும் விற்பனை முடிவை இயந்திரத்தில் அன்றைய தினமே பதிவு செய்வதையும் உறுதி செய்யவேண்டும் என அறிவுறுத்தினார்கள். அனுப்பப்பட்ட பொருள்களில் வித்தியாசம் இருப்பின் அதன் விபரத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட கிட்டங்கி மேலாளருக்கு தெரிவிக்கவேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் டிசம்பர் 2016-க்கு பிறகு ஸ்மார்ட் கார்டு மூலம் உணவு பொருட்கள் வழங்க தமிழக அரசு மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளை வட்ட வழங்கல் அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் என்றும் இணையதளம் மூலம் நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்வது குறித்து வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும், ஸ்மார்ட் கார்டு வழங்குவதற்காதத்தான் ஆதார் எண் நியாயவிலைக் கடையில் பெறப்படுகிறது என்பதையும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் / பொது மக்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும் என அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார். நியாயவிலைக் கடையின் செயல்பாடுகள் குறித்தும் விற்பனை விபரங்கள் குறித்தும் இணையதளம் மூலமே தணிக்கை செய்ய அறிவுத்தினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, மாவட்ட வழங்கல் அலுவலர்(பொ) திரு. இராமச்சந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. இராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. சொக்கலிங்கம், வட்ட வழங்கல் அலுவலர்கள் திரு. ஜாண் அலெக்சாண்டர், திரு. சந்திரசேகரன், திரு. அபிரகம் டென்னி, திரு. கோலப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்(பொ),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.